# செலான் வங்கியின் சாதாரண பங்குகளின் பொது வழங்கல் செப். 22இல் ஆரம்பம்

### *54,290,000 சாதாரண வாக்குரிமையுள்ள பங்குகள் வழங்கப்படுகின்றன*

ஒவ்வொன்றும் 35/= பெறுமதியான 54,290,000 சாதாரண வாக்குரிமையுள்ள பங்குகளுக்கான பொதுவ ழங்கலை மேற்கொள்ளவுள்ளமை தொடர்பில் செலான் வங்கி இன்று அறிவித்துள்ளது.

இப் பங்குவழங்கல் பொதுமக்களுக்காக 2009 செப்டம்பர் 22ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக் கப்படும். எவ்வாறிருந்தபோதிலும், முதலீட்டாளர்கள் இப்போதிலிருந்தே விண்ணப்பிக்க முடியும். இது தொடர்பான முக்கிய விபரங்கள் அடங்கிய கையேடு மற்றும் விண்ணபப்பபடிவங்களை நாடு பூராகவும் உள்ள அனைத்து செலான் வங்கிக் கிளைகளிலும் கொழும்புப் பங்குச் சந்தையின் அங்கத்துவ நிறுவனங் கள் மற்றும் பங்குக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் அங்கத்துவ நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ள லாம்.

2009 செப்டம்பர் 02 ஆம் திகதி பங்குச் சந்தை வர்த்தகம் முடிவடைவதற்கு முன்னர் பதிவு செய்துகொள் ளும் தற்போது வங்கியின் ஆரம்ப வாக்குரிமையுள்ள பங்குதாரர்களுக்கு பங்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கப்படும். வங்கியியல் சட்டத்தின் கீழ் தற்போது நடைமுறையிலுள்ள பங்குகளை வைத்திருப்பதற் கான வரையறைகளின் பிரகாரம் இவ் ஒதுக்கீடு செய்யப்படும். பங்குதாரர் ஒருவர் வைத்திருக்கும் ஒவ் வொரு 02 பங்குகளுக்குமாக குறைந்தது 01 பங்கு வழங்கப்படும்.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் ஒரு விண்ணபத்திற்காக அல்லது 100 பங்குகளுக்கான ஆகக் குறைந்த அங்கத்துவ கொடுப்பனவு 3500 ரூபா. அதன்பின்னர் 50 இன் மடங்குகளிலான பங்குகளுக்காக 1750 ரூபாவாகும். இந்த பொதுசன பங்கவழங்கலின் ஊடாக மொத்தமாக 1.9 பில்லியன் ரூபாவை திரட்டிக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பங்குகளுக்காக மிகை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுகின்ற சந்தர்ப்பமொன்றின்போது. விநியோக நட வடிக்கைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஏழு (பங்குச்) சந்தை நாட்கள் பூர்த்தியடைவதற்குள் பங்கு ஒதுக்கீடு தொடர்பான அடிப்படை செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும்.

செலான் வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட கூறுகையில், பரந்துபட்டளவிலான எதிர்கால விஸ்த ரிப்பு தொடர்பாக தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு உதவும் வகையில் வங்கியின் மூலதன மட்டத்தை ஸ்திரப்படுத்துவதே, இந்த பொதுப் பங்குவழங்கலுக்கான அடிப்படைக் காரணமாக அமைந்த து என்று கூறினார்.

அதேவேளை செலான் வங்கி ஒவ்வொன்றும் 35/= பெறுமதியான 32,150,000 புதிய ஆரம்ப (வாக்குரி மையுள்ள) பங்குகளை தனிப்பட்ட ஏற்பாடு என்ற அடிப்படையில் வழங்குகின்றது. அதாவது, இவற்றுள் இலங்கை வங்கி 13 மில்லியன் சாதாரண வாக்குரிமையுள்ள பங்குகளையும் இலங்கை காப்புறுதிக் கூட் டுத்தாபனம் மீதமுள்ள 19,150,000 சாதாரண வாக்குரிமையுள்ள பங்குகளையும் பெற்றுக் கொள்கின்றன. இதன்மூலம் மொத்தமாக மூலதனத்தில் 24.7 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியா னது ஏற்கனவே செலான் வங்கியின் 3.5 வீத பங்குகளை கொண்டுள்ளது.

பங்குகளின் தனிப்பட்ட ஏற்பாடு மற்றும் பொதுசனப் பங்குவழங்கல் ஆகிய இரண்டு முறைகளின் ஊடாக வும் 3.0 பில்லியன் மூலதனத்தை உருவாக்கக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அர சாங்கத்திற்கு சொந்தமான இலங்கை வங்கி மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு தனிப்பட்ட ஏற்பாட்டின் கீழ் புதிய பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படுவதன் மூலம், செலான் வங்கியில் அர ச நிறுவனங்கள் கொண்டுள்ள மூலதனம் 28 வீதமாக அதிகரிக்கும். அத்துடன், பங்குகளை கொடுப்பதற்

காக வைத்திருக்கும் செலான்  வங்கி ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்கு, அதிகரித்த மூலதனத்தில்  9 வீதமாக இருக்கும்.